**OS No.94/2019**

**Deposition of D.W.2**

**Dated : 13.07.2023**

**Name** : Thiru. Kumar

Solemnly affirmed by Thiru.P.A.Sivapadman

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் என்ன பணியாற்றி ஓய்வு பெற்றுள்ளேன் என்றால், வங்கியில் கேசியராக இருந்து ஓய்வு பெற்று விட்டேன். வாதி எனது உடன் பிறந்த சகோதரி என்றால், ஆமாம். இந்த வழக்கு சொத்து எனது தகப்பனார் கணேசபிள்ளைக்கு பாத்தியப்பட்டது என்றால், ஆமாம். அது எனது தகப்பனார் விலைக்கு வாங்கிய சொத்து என்றால், ஆமாம். அவரது சொந்த வருமானத்தை கொண்டு வாங்கிய சொத்து ஆகும். அதில் உள்ள கட்டிடத்தை எனது தகப்பனார் லோன் போட்டு கட்டினார் என்றால், ஆமாம். பட்டிகை சொத்தில் உள்ள கட்டிடம் தரைதளம் மற்றும் முதல் தளம் கொண்டது என்றால், ஆமாம். பட்டிகை சொத்து தனக்கு எந்தவித உரிமையும் வேண்டாம் என கூறி ஆவணம் எதுவும் எழுதிகொடுக்கவில்லை என்றால், சரிதான். இந்த பட்டிகை சொத்தை பொறுத்து எனது தகப்பனார் எந்த ஆவணமும் எழுதிவைக்கவில்லை என்றால், சரியல்ல. உயில் எழுதி வைத்துள்ளார். எனது தகப்பனார் உயில் எழுதி வைத்துள்ளதாக எனது எதிர்வழக்குரையில் நான் சொல்லவில்லை என்றால், முதல் எதிர் வழக்குரை தாக்கல் செய்தபோது உயில்பற்றி எனக்கு தெரியாது. அது தெரிந்தபின்பு 2வது எதிர் வழக்குரையில் தாக்கல்செய்துள்ளேன். எனது முதல் எதிர் வழக்குரையில் எனக்கும் 5ல் 1 பாகம் வேண்டும் என கேட்டுள்ளேன் என்றால், சரிதான். நான் கூறும் உயில் இருப்பதாக யார் எனக்கு சொன்னது என்றால், எனது 2வது அண்ணன் கண்ணன் கூறினார். எந்த வருடம் என்னிடம் கூறினார் என்றால், எனது தம்பி அசோகன் 2021ல் காலமானபிறகு கூறினார். அந்த உயிலை நான் பார்த்திருக்கிறேனா என்றால், ஜெராக்ஸ் நகலைதான் பார்த்து இருக்கிறேன். ஜெராக்ஸ் யார் என்னிடம் கொடுத்தது என்றால், உயில் ஆவணத்தில் சாட்சி கையொப்பம் போட்டுள்ள பத்மநாபன் என்பவர் கொடுத்தார். எந்த

வருடம் ஜெராக்ஸ் உயிலை காட்டினார் என்றால், 2021 மே மாதத்திற்கு காட்டினார். பத்மநாபனின் வீடு எங்கு உள்ளது என்றால், பட்டிகை சொத்தில் உள்ள எனது தகப்பனாரின் வீட்டிற்கு அடுத்த வீடு பத்மநாபன் வீடு ஆகும். அந்த உயில் எங்கு பதிவு செய்யப்பட்டது என்றால், அது பதிவு செய்யப்படாத உயில் ஆகும். அந்த உயிலில் அசல் ஆவணம் யாரிடம் உள்ளது என்றால், அது எனது தகப்பனாரின் வீட்டில் இருந்தது. அதை யார் எடுத்துள்ளார்கள் என எனக்கு தெரியாது. நான் கூறுவதுபோன்று உயில் எதுவும் எனது தகப்பனார் எழுதி வைக்கவில்லை என்றால், சரியல்ல. 2ம் பிரதிவாதி கண்ணன் என்னிடம் பொய்யாக சொல்லியதன் அடிப்படையில் நானும் உயில் ஆவணம் இருப்பதாக உண்மைக்கு மாறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல. பட்டிகை சொத்தில் உள்ள வீட்டின் தரைதளத்தில் யார் வசிக்கிறார் என்றால், தரைதளத்தில் காலமான எனது தம்பி அசோகனின் குடும்பம் உள்ளது. முதல் தளத்தில் 2ம் பிரதிவாதி கண்ணன் வசிக்கிறார். இந்த நபர்கள் கூட்டுகுடும்பத்தின் உறுப்பினர்கள் என்ற அடிப்படையில் அதில் வசித்து வருகிறார்கள் என்றால், சரிதான். இந்த வழக்கின் தள்ளுபடி உத்தரவை ரத்து செய்து மீண்டும் கோப்பிற்கு எடுக்க தாக்கல் செய்யப்பட்ட நிலுவை காலத்தில் 2ம் பிரதிவாதியும் அசோகனின் வாரிசுகளும் பாகபத்திரத்தை ஏற்படுத்தி உள்ளார்கள் என்றால், இல்லை. வழக்கை மீண்டும் கோபபிற்கு எடுக்க தாக்கல் செய்யப்பட்ட மனுவின் நகலை வாங்க எங்கள் வழக்கறிஞர் மறுத்தார் என்றால், சரியல்ல. கண்ணன் மற்றும் அசோகனின் வாரிசுகள் போட்டதாக சொல்லப்படும் பாகபத்திரத்தில் நான் கூறும் உயில் குறித்து சொல்லப்பட்டுள்ளதா என்றால், எனக்கு தெரியாது. அது தெரியாமல் நான் சாட்சி கையொப்பம் போட்டேனா என்றால், பாகபத்திரத்தில் உள் அடக்கத்தில் உயில் குறித்து உள்ளதா என எனக்கு தெரியாது. என்னை யார் சாட்சியம் கையொப்பம் போட சொன்னது எனறால், கண்ணன் மற்றும் அசோகனின் வாரிசுகள் கூறினர். நான் கூறும் பாகபத்திரம் மோசடியானது என்றாலும், அதில் நானும் மோசடியாக சாட்சி கையொப்பம் போட்டுள்ளேன் என்றாலும், சரியல்ல.நான் கூறுவதுபோன்று உயில் ஆவணம் எதுவும் இல்லை என்றால், சரியல்ல. அவ்வாறு உயில் இருந்தால் அதுவும் மோசடியான ஆவணம் என்றால், சரியல்ல. உயில் ஆவணம் மோசடியானது

என்பதால்தான் அதை நீதிமன்றத்தின் பார்வைக்கு நாங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால், சரியல்ல. நான் கூறும் பத்மநாபன் என்னவேலை பார்க்கிறார் என்றால், பாரத ஸ்டேட் வங்கியில் பணியாற்றி ஓய்வு பெற்றுவிட்டார். ஓய்வு பெற்று எங்கள் வீட்டின் அடுத்த வீட்டிற்கு வசிக்கிறாரா என்றால், தற்சமயம் அவர் அந்த வீட்டில் இல்லை. கோயம்புத்தூரில் இருக்கிறார். பத்மநாபன் நிறைய தொழில் செய்து வருகிறார் என்றால், இல்லை.அவர் ஒரு எழுத்தாளர் ஆவார். அவர் புத்தக கடை வைத்துள்ளார் என்றால், இல்லை. பத்மநாபன் மற்றும் வழக்கறிஞர் ஸ்ரீகுமரன் நாயர் ஆகியோரிடம் உயில் ஆவணம் குறித்து விசாரித்து அறிந்தாக வழக்கிக்காக பொய்யாக கூறுகிறேன் என்றால், சரியல்ல. எனது தகப்பனார் உயில் எழுதி வைக்கவேண்டும் என எண்ணி இருந்தால், பதிவுசெய்யப்பட்ட உயிலாக எழுதி வைத்திருப்பார் என்றால், சரியல்ல. உண்மையிலேயே உயில் ஆவணம் இல்லை என்பது எனக்கு தெரியும் என்றாலும், 2ம் பிரதிவாதியின் நிர்ப்பந்தனத்தினால் உயில் ஆவணம் இருப்பதாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும், சரியல்ல. எனது நிருபண வாக்குமுலத்தில் உண்மைக்கு புறம்பாக சொல்லி உள்ளேன் என்றால், சரியல்ல. பட்டிகை சொத்தில் வாதிக்கு இருக்கும் பாக உரிமையை கொடுக்காமல் இருக்கும் பொறுட்டு நானும், மற்ற பிரதிவாதிகளுடன் கூட்டு சேர்ந்து , பொய்யான கூடுதல் எதிர் வழக்குரையை தாக்கல் செய்து, நீதிமன்றத்தில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும்,வாதி வழக்குரையில் கோரியபடி தீர்ப்பாக வேண்டும் என்றாலும், சரியல்ல.